ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட, மணப்பாக்கம் காசா கிராண்ட் ஐரேன் குடியிருப்போர் நலச்சங்கத்தின் ஆண்டு பொது உறுப்பினர்கள் கூட்டம் மற்றும் 300 கிலோ வாட் சூரிய சக்தி மின் திட்டம் மற்றும் ஐரேன் கார்டன் திறப்பு விழாவில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு திறந்து வைத்தார்.அருகில் மண்டலக் குழுத் தலைவர் என்.சந்திரன், வட்டச் செயலாளர் டி.ரவி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர் பாபு நேற்று (26.10.2025) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி, திரு.வி.க நகர் மண்டலத்தில் வார்டு 70, கபிலர் தெருவில், ரூபாய் 4.63 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் சென்னை நடுநிலைப்பள்ளி கட்டடத்தின் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார் இந்த ஆய்வின்போது, மேயர் திருமதி.ஆர்.பிரியா, மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், மண்டலக் குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர் திருமதி சி. ஸ்ரீதனி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

மறைந்த சட்டமன்ற உறுப்பினர் கே.பொன்னுசாமி நினைவேந்தல்!

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. சிறப்பு செயற்குழுக் கூட்டத்தில் அஞ்சலி!

நாமக்கல் அக. 27- நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் பழங்குடியினர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பொன்னுசாமி உடல்நலக் குறைவால் காலமானார். நடுக்கோம்பையில் உள்ள இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள், சட்டப் பேரவை, மக்களவை, மாநிலங்களவை உறுப்பினர்கள் அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து கொல்லிமலை சோளக்காட்டில் உள்ள அவரது வீட்டிற்கு உடல் கொண்டு செல்லப்பட்டு மலைவாழ் மக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக வைக்கப்பட்டு தமிழ்நாடு அரசு உத்தரவின்பேரில் மறைந்த சட்டமன்ற உறுப்பினர் பொன்னுசாமியின் உடலுக்கு அரசுத் தரப்பில் மரியாதை செலுத்தப்பட்டது. அவரது உடல்மீது திமுக கொடி போர்த்தப்பட்டு, காவல் துறையினர் 30 குண்டுகள் முழங்க இறுதி அஞ்சலி செலுத்தினர்.

இதையடுத்து நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக சிறப்பு செயற்குழு கூட்டம் முல்லைநகர் கலைஞர் அறிவாலயம் இனமான பேராசிரியர் கூட்டரங்கில் சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் பொன்னுசாமிக்கு நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது. மாவட்ட அவைத் தலைவர் சி.மணிமாறன் தலைமையில் நாமக்கல் கிழக்கு மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது. தமிழ்நாடு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் மதிவேந்தன் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவரு மான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு மறைந்த சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் பொன்னுசாமியின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தி அவர் கழகத்திற்கு ஆற்றிய பணிகளை பற்றி பேசுகையில்...

சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினரும், நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகத் துணை செயலாளரும். நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் துணைத் தலைவருமான பொன்னுசாமி கடந்த 23.10.2025 அன்று திடீர் உடல் நலக்குறைவால் நம்மைவிட்டு மறைந்த செய்தி பேரதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

1986ஆம் ஆண்டு கொல்லிமலை வாழவந்தி நாடு ஊராட்சி மன்றத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டது முதல் மக்கள் பணியை தனது இறுதி காலம் வரை தொய்வின்றி ஆற்றி வந்தவர்.

மலைவாழ் மக்களுக்கான தொழிற்பயிற்சி நிலையம். கொல்லிமலையில் இரத்த வங்கி,மிளகு பதப்படுத்தும் தளம் , துறையூர் சாலையை 40 கோடி ரூபாய் செலவில் அகலப்படுத்தும் பணி என பல்வேறு சாதனைகளைப் புரிந்தவர். தற்போது சேந்தமங்கலம் தொகுதி மக்களின் குடிநீர்ப் பிரச்சனை யை தீர்க்கும் வகையில் ரூ.500 கோடியில் கூட்டுக்குடிநீர்த் திட்டம் விரைவில் நடைமுறைக்கு வர உள்ளது.

அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்கள் என்றும், அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவிக்க வந்த துணை முதல்வருக்கும், துணை முதல்வர் வாயிலாக ஆறுதல் தெரிவித்த தமிழ்நாடு முதல்வருக்கும், அமைச்சர்களுக்கும், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றி என்று கூறினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர் நலங்கிள்ளி, ராணி பெரியண்ணன், பொருளாளர் ஏ.கே.பாலசந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் டாக்டர் மாயவன், பொதுக்குழு உறுப்பினர் காளியய்பன், மேயர் கலாநிதி, துணை மேயர் பூபதி, நகர செயலாளர்கள் ராணா ஆனந்த் சிவக்குமார், ஒன்றிய செயலாளர்கள் அசோக்குமார், ராமசுவாமி , நவலடி, பழனிவேல், ஜெகநாதன், பாலசுப்பிரமணி, செந்தில் முருகன், எம்பி கௌதம், ஜெயபிரகாஷ் , ஆர்.எம்.துரைசாமி,

பேரூர் செயலாளர்கள் தனபாலன், முருகேசன், செல்லவேல், சுப்பிரமணி, ஜெயக்குமார் பொன்.நல்லதம்பி பழனியாண்டி, அன்பழகன் கண்ணன், ராஜேஷ் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் பொன் சித்தார்த், கிருபாகரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அரசு விழாவில் பங்கேற்க - அக்.29 அன்று

தென்காசிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வருகை!

அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பேட்டி!

தென்காசி, அக்.27- தென்காசி மாவட்டத்திற்கு திராவிட மாடல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இம்மாதம் 29 ம் தேதி (நாளை மறு நாள்) வருகை தந்து அரசு நிகழ்வில் பங்கேற்று 2,44,663 பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பிக்க உள்ளார். என வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் தெரி வித்தார்.

தென்காசி மாவட்டத்திற்கு முதலமைச்சர் அவர்கள் வருகை தர உள்ளதை முன்னிட்டு தென்காசி இலத்தூர் விலக்கு ஆய்க்குடி சாலை யில் நல்லமணி கல்லூரிக்கு கீழ்புறம் அமைந்துள்ள ஆய்க்குடி பேரூராட்சி அனந்தபுரம் ஜாஸ் ஸ்மார்ட் சிட்டி மைதானத்தில் அரசு விழா நடைபெற உள்ளதை முன்னிட்டு பிரம்மாண்ட ஏற்பாடுகள் மற்றும் பணி கள் முழு வீச்சில் நடை பெற்று வருகிறது.

இப்பணிகளை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர், தென்காசி மாவட்ட பொறுப்பு அமைச்சருமான கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச் சந்திரன், மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர், நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன், தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெய பாலன், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் முன்னாள் மாவட்ட பொறுப்பாளர் தலைமை செயற்குழு உறுப்பினர் மா.செல்லத்துரை ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

பின்னர் அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.இராமச்சந்திரன் கூறியதாவது.

திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் இம்மாதம் 29 ம் தேதி தென்காசி மாவட்டத்திற்கு வருகை தருகிறார்.அப்போது அரசு சார்பில் நடைபெறுகிற விழாவில் பங்கேற்று 2,44,663 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பிக்கிறார். இதற்காக அமைக்கப்பட்டு வரும் பிரம்மாண்ட மான பந்தல் மற்றும் மேடை ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டோம். சுமார் 25,000 பேர்கள் அமருகின்ற வகையில் மிகப் பிரமாண்டமாக பந்தல் அமைக்கப்பட்டுள்ளது.மேலும் முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றப்பட்ட பல்வேறு திட்டங்களை துவக்கி வைக்கிறார். புதிய திட்டங்களுக்கான அறிவிப்பும் வெளியாகிறது என்றார்.

இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.இராமச்சந்திரன் தெரிவித்தார்.

நிகழ்வில் மாநில விவசாய அணி இணை செயலாளர் அப்துல்காதர், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் டாக்டர் கலை கதிரவன் (தென்காசி) கணேஷ்குமார் ஆதித்தன் (ஆலங்குளம்) மாவட்ட அவைத்தலைவர் மாவடிக்கால் சுந்தரமகா லிங்கம், மாவட்ட துணை செயலாளர்கள் கனிமொழி,கென்னடி,மாவட்ட பொருளாளர் ஷெரீப்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன்,ஆறுமுகச்சாமி, முத்துப்பாண்டி, ஷேத்தாவூது, சேசுராஜன், பொதுக்குழு உறுப்பினர்கள் சாமித்துரை,ரஹீம், இராஜேஸ்வரன்,தமிழ்செல்வி, ஒன்றிய செயலாளர்கள் அழகுசுந்தரம்,வல்லம் திவான் ஒலி, ரவிசங்கர், சுரேஷ், ஜே.கே.ரமேஷ், சீனித்துரை, மணிகண்டன், ஜெயா, அன்பழகன், வீராணம் சேக் முகமது, பொன் செல்வன், சிவக்குமார், நகர செயலாளர்கள் சாதிர், வெங்கடேசன், கணேசன், அப்பாஸ், பீரப்பா, பிரகாஷ், பேரூர் செயலாளர்கள் சுடலை, குட்டி, முத்தையா, பண்டாரம், கோபால், ராஜராஜன்,தங்கப்பா, வெள்ளத்துரை, சிதம்பரம்,முத்து, ஒன்றிய குழு தலைவர்கள் ஷேக் அப்துல்லா (தென்காசி) திவ்யா மணிகண்டன் (ஆலங்குளம்) கடையநல்லூர் நகர்மன்ற தலைவர் மூப்பன் ஹபீபூர் ரஹ்மான், அரசு வழக்கறிஞர் வேலுச்சாமி, மாவட்ட அணி அமைப்பாளர்கள் கிருஷ்ணராஜா, முருகன்,தங்கராஜ் பாண்டியன்,அழகு தமிழ் சங்கர், கோமதிநாயகம்,இஞ்சி இஸ்மாயில், இசக்கிப் பாண்டியன்,வளனரசு,

இலத்தூர் பரமசிவன்,செல்வ சூடாமணி, முத்துராமலிங்கம், மாவட்ட அணி துணை அமைப்பாளர் கள் ஐவேந்திரன் தினேஷ், கனகராஜ் முத்து பாண்டியன்,கரிசல் வேலுச்சாமி, கருப்பணன்,வக்கீல் வேலுச்சாமி,ராமராஜ், ராஜேந்திரன்,தங்கபாண்டியன், குற்றாலம் சுரேஷ் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

பி.ஜே.பி. அரசு வாக்காளர் பட்டியலில் குளறுபடி செய்ய முயற்சி!

புதுச்சேரி - காரைக்கால் மாநில வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

மாநில அமைப்பாளர் ஏ.எம்.எச்.நாஜிம் ஆலோசனை வழங்கினார்!

காரைக்கால், அக்.27- வரும் சட்டமன்ற தேர்தலில் எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களை கைப்பற்ற வேண்டும் என்ற கனவுடன் பி.ஜே.பி. அரசு வாக்காளர்கள் பட்டியல் திருத்தம் என்ற பெயரில் எதிர்கட்சியினர் வாக்குகளை சிதறடிக்கும் செயலில் ஈடுபட்டு வருவதாக காரைக்கால் மாவட்ட தி.மு.க. அமைப்பாளரும் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினருமான ஏ.எம்.எச்.நாஜிம் கூறினார். எனவே தி.மு.க. வாக்கு சாவடி முகவர்கள் கவனத்துடன் வாக்காளர்கள் பட்டியலை சரிபார்க்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

புதுச்சேரி மாநிலம் காரைக்கால் அடுத்த பி.எஸ்.ஆர். நகரில் மாவட்ட திமுக சார்பில் சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்த பணிகள் குறித்த வாக்கு சாவடி முகவர்களின் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

நிரவி திருப்பட்டினம் திமுக சட்டமன்ற உறுப்பினர் நாக.தியாகராஜன் முன்னிலையிலும், காரைக்கால் மாவட்ட திமுக அமைப்பாளரும், திமுக சட்டமன்ற உறுப்பினருமான ஏ.எம்.எச்.நாஜிம் தலைமையிலும் கூட்டம் நடைபெற்றது.

அப்போது பேசிய காரைக்கால் மாவட்ட திமுக அமைப்பாளரும் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினருமான ஏ.எம்.எச்.நாஜிம் வரும் சட்டமன்ற தேர்தலில் எதிர்க்கட்சிகளின் வாக்குகளை சிதறடிக்கும் வகையில் சிறப்பு வாக்காளர் திருத்த பட்டியல் என்ற பெயரில் ஒன்றிய அரசு வாக்காளர்கள் பெயர்களை நீக்கம் செய்து வருவது பிற மாநிலங்களே சாட்சி என கூறினார்.

ஆகையால் தி.மு.க. வாக்கு சாவடி முகவர்கள் ஒன்றிய அரசின் இத்தகைய சூழ்ச்சியை முறியடிக்கும் வகையில் வாக்காளர்கள் பட்டியலை மிகவும் கவனத்துடன் சரிபார்க்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட தி.மு.க. துணை அமைப்பாளர் காசிநாதன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஐ.முஹம்மது ரிஃபாஸ், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் அமுதா ஆறுமுகம் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் பங்கேற்றனர்.

புதுச்சேரி மாநிலம் காரைக்கால் அடுத்த பி.எஸ்.ஆர். நகரில் மாவட்ட திமுக சார்பில் சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்த பணிகள் குறித்த வாக்கு சாவடி முகவர்களின் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. நிரவி திருப்பட்டினம் திமுக சட்டமன்ற உறுப்பினர் நாக.தியாகராஜன் முன்னிலையிலும், காரைக்கால் மாவட்ட திமுக அமைப்பாளரும், திமுக சட்டமன்ற உறுப்பினருமான ஏ.எம்.எச். நாஜிம் தலைமையிலும் கூட்டம் நடைபெற்றது.